Batticaloa.

Summary Report of the Auditor General on the Financial Statements of the District Secretariat, Batticaloa for the year ended 31 December 2019 in terms of Section 11(1) of the National Audit Act No. 19 of 2018.

---

The above mentioned report sent herewith.

M.N. Abeysiri
Assistant Auditor General
For Auditor General.

Copy to: The Director General, Department of State Accounts, General Treasury.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. ENP/BT/A/Dis.Sec/FS/02/2019/05
ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date 28 May 2020

மாவட்ட செயலாளர்
மாவட்ட செயலகம்
மட்டக்களப்பு

**மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை**

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்படும் இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மட்டக்களப்பு மாவட்ட



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்ககூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்தபோதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு எண்ணவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| பந்திக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 1.6.2 (உ) | மீளாய்வாண்டில் திணைக்கள விற்பனைகள் மூலம் பெறப்பட்ட ரூபா 103,100 தொகையானது காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சலின் கீழ் வெளிக்காட்டுவதற்கு பதிலாக தொழிற்பாட்டு செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | விற்பனை மூலம் பெறப்பட்ட காசு உட்பாய்ச்சல் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சலின் கீழ் வெளிக்காட்டப்படுதல் வேண்டும். |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி செயலாற்றல் கூற்று

நிதிப்பிரமாணம் 106 மற்றும் 113 இன் பிரகாரம், 26 அலுவலக வாகனங்களுக்கு ஏற்பட்ட 32 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றின் நட்டம் மற்றும் கைவிடுதல் பற்றிய கூற்றில் (குறிப்பு 01) கூட்டுமொத்த இழப்பீட்டு பெறுமதியாக ரூபா 7,574,260 காட்டப்பட்டிருந்தது. இவ் இழப்பீட்டிற்கு எதிராக காப்புறுதி நிறுவனம் மற்றும் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 6,730,186 தொகை வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், இழப்பீட்டிற்கு எதிராக சீர் செய்யப்பட்டு உண்மையான இழப்பீட்டு பெறுமதி கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 1.6.2 நிதி நிலைமை கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(i) கட்டிடங்களும் கட்டமைப்பிற்கான கணக்கின் பிரதான பேரேட்டில் ஆரம்ப மீதியாக ரூபா 1,148,016,532 தொகையாக காட்டப்பட்ட போதிலும், நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 1,180,780,385 தொகையாக காட்டப்பட்டமையினால் மீளாய்வாண்டிற்கான மொத்த சொத்தானது ரூபா 32,763,853 தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

(ii) இயந்திர மற்றும் உபகரணங்களுக்கான கணக்கின் பிரதான பேரேட்டில் ஆரம்ப மீதியாக ரூபா 405,147,500 தொகையாக காட்டப்பட்ட போதிலும், நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 403,156,986 தொகையாக காட்டப்பட்டமையினால் மீளாய்வாண்டிற்கான மொத்த சொத்தானது ரூபா 1,990,514 தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

(iii) பூர்த்தி செய்யப்படாது நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற புதிய மாவட்ட செயலகக் கட்டிடம் மற்றும் மண்முனை தென்எருவில் பற்று பிரதேச செயலகக் கட்டிட நிர்மாண வேலைகள் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரை செலுத்தப்பட்ட கூட்டு மொத்தத் தொகையான ரூபா 477,697,552 நடைமுறையல்லாச் சொத்துக்கணக்கில் நடைமுறை வேலையாக (Work-in-progress) வெளிக்காட்டப்படுவதற்கு பதிலாக கட்டிடங்களும் கட்டமைப்பிற்கான கணக்கில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

(iv) மீளாய்வாண்டில் PD-6860 இலக்க அலுவலக வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக, அதற்கு ஏற்பட்ட சேதத்தின் பெறுமதி ரூபா 1,460,348 மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதன் உண்மைப் பெறுமதி கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றில் நட்டங்கள் மற்றும் கைவிடுதல் பற்றிய கூற்றில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(v) மாவட்ட செயலக நிருவாக எல்லைக்குட்பட்ட மண்முனை தென் எருவில் பற்று, மண்முனை வடக்கு, கோறளைப்பற்று, மண்முனை மேற்கு, கோறளைப்பற்று வடக்கு மற்றும் போரதீவுப்பற்று ஆகிய 06 பிரதேச செயலகத்திற்கான பிரதேச செயலாளர்கள் வதியும் இல்லங்களின் பெறுமதி கணப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

### 1.6.3 மூலகச் செலவீனம்

நிதிப்பிரமாணம் 66 இற்கு அமைவாக ஒரே தலைப்பின் கீழ் இரு செயற்திட்டங்களுக்கிடையே மாற்றம் செய்வதற்கு மீளாய்வாண்டில் திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுமொத்த தொகையாக ரூபா 6,417,718 உள்ள போதிலும், அத்தொகை நிகழ்ச்சித்திட்டத்தின் மூலமான செலவின சுருக்கத்தில் (ஏசீஏ-2) ரூபா 6,500,238 தொகையாக காட்டப்பட்டுள்ளது.

### 1.6.4 திறைசேரி புத்தகங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(i) திறைசேரி அச்சுப்பிரதியின், பொறுப்புக்கான ஒதுக்கச் சுருக்கத்தில் (எஸ்ஏ-90) தலைப்பில் 9165-0-0-269-0-0-0 விடயத்தின் கீழ் ரூபா 2,170,063,633 தொகை பொறுப்பாக காட்டப்பட்ட போதிலும், அத்தொகை நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(ii) திறைசேரி அச்சுப்பிரதியின் பிரகாரம், பொறுப்புக்கள் எதுவும் காணப்படாதிருந்த போதிலும், நிதிக்கூற்றின் பொறுப்புக்கள் பற்றிய கூற்றில் (குறிப்பு (IV)) பொறுப்பாக ரூபா 671,382 தொகை காட்டப்பட்டிருந்தது. அத்தொகை திறைசேரியின் ஏடுகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

1.6.5 காசுப்பாய்ச்சல் கூற்று

ஆண்டிற்கான காசின் ஏற்பட்ட தேறிய அசைவானது பூச்சியத் தொகையாக காணப்பட்ட போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் மீளாய்வாண்டுக்கான தேறிய காசு அசைவாக ரூபா 58,417,194 தொகை மறைப் பெறுமதியாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றின் தமிழ் பிரதியில் காட்டப்பட்டிருந்தது.

1.6.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மாவட்ட செயலகத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 06 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2020 மே 27 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிராததுடன், அந்த ஐயவினாக்களுக்குரிய மதிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதியானது ரூபா 18,025,247 ஆகும்.

2. நிதி மீளாய்வு

2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

திட்டமிடப்பட்டவாறு உரிய காலப்பகுதியில் குறித்த பணிகளை நிறைவேற்றாது, அந்த பணிகளை ஆண்டின் இறுதியில் முனைவதால் தேவையான கட்டுநிதிகள் திறைசேரியினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதனால் ரூபா 610,821,573 கூட்டு மொத்தப் பெறுமதியான 496 பணிகள் நிறைவேற்ற முடியாது போயிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தன.

2.2 வருமான முகாமைத்துவம்

மீளாய்வாண்டில் ஏனைய பெறுகைகளுக்காக ரூபா 30,646,200 தொகை வருமான மதிப்பீடாக மேற்கொள்ளப்பட்டிருந்தும் இதற்கு மேலதிகமாக ரூபா 258,244,484 தொகை சேகரிக்கப்பட்டிருந்தமையால் மதிப்பிடப்பட்ட ஏனைய பெறுகை வருமானத்தில் 843 சதவீதமாக காணப்பட்டது.

2.3 செலவின முகாமைத்துவம்

நிதி அமைச்சின் 2019 ஜூன் 17 ஆந் திகதிய 04/2019 இலக்க வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபத்தின் பிரிவு 02(II) இற்கு அமைய, மின்சார பட்டியலில் 5 சதவீதத்தினை சேமிப்பதற்கு கவனம் செலுத்துமாறு பணிக்கப்பட்டிருந்தும், இதற்கு முரணாக வழங்கப்பட்ட நிதியேற்பாட்டில் 1 சதவீதத்திற்கும் குறைந்த தொகையினையே மாவட்ட செயலகத்தினால் சேமிப்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

2.4 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(i) விவசாய மற்றும் வீட்டுத்தோட்டத்தினூடாக நஞ்சற்ற விவசாய உற்பத்திகளை அதிகரித்து அதனூடாக மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் போசாக்கு மட்டத்தினை அதிகரிக்கும் நோக்கத்துடன் வாகரை பிரதேசத்தில் 54 விவசாய கிணறுகள் நிர்மாணிப்பதற்காக தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் பொருளாதார வலுப்படுத்தல் மற்றும் உட்கட்டமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டில் கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட நிதியேற்பாட்டில் ரூபா 4,980,533 தொகை பயனற்ற செலவீனமாக காணப்படுகின்றது. இது செலவு செய்யப்பட்ட நிதியேற்பாட்டில் 66 சதவீதமாகும்.

(ii) காவத்தமுனை வீட்டுத்திட்ட மக்களுக்கு குடிநீர் வழங்கும் செயற்திட்டத்திற்காக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரம், மீள்குடியேற்ற அமைச்சின் கிராமிய உட்கட்டமைப்பு விஷேட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 1,500,000 தொகையும், தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தினால் ரூபா 1,470,000 தொகையும் கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகத்திற்கு நிதியேற்பாடாக வழங்கப்பட்டிருந்தும் இச்செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் அடையப்பெறவில்லை.

(iii) யுத்தத்தினால் தமது வாழ்வாதாரத்தை இழந்த மக்களின் வருமான மட்டத்தினை உயர்த்தும் நோக்கத்திற்காக அப்போதைய தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் பொருளாதார வலுப்படுத்தல் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கோழிக் குஞ்சுகள் மற்றும் அதற்கான கூடுகள் வழங்குவதற்காக மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகத்திற்கு 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 1,800,000 தொகை நிதியேற்பாடாக வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், வழங்கப்பட்ட 3,000 கோழிக் குஞ்சுகளில் 367 கோழிகள் மாத்திரமே தற்பொழுது பயனாளிகளினால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

2.5 **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(i) மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக இலகுவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் செய்த மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை செயற்றிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை செய்ய வேண்டிய போதிலும் அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வுத் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதாக கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.6 **நிலுவை கடன் மீதிகளை அறவிடாமை**

கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம், அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,095,448 தொகையாக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 02 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும், அந்த நிலுவை மீதிகளை அறவிடும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான மட்டத்தில் காணப்பட்டது. அவற்றை அறவிடுவதற்கு மாவட்டச் செயலகம் தவறியிருந்தது.

2.7 **வைப்புக்கள்**

காணி சுவிகரிப்பு நடவடிக்கைக்காக, கழிவு நீர் அகற்றல் கருத்திட்டம் மற்றும் கிழக்கு மாகாண கிராமிய கைத்தொழில் திணைக்களத்திடமிருந்து 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட முறையே ரூபா 400,000, ரூபா 50,000 தொகைகள் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படாது இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக வைப்புக் கணக்கில் பேணப்பட்டு வருகின்றன.

3. செயற்பாட்டு மீளாய்வு மற்றும் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் செயற்பாட்டு மீளாய்வு, நிலைபேறான அபிவிருத்தி, நல்லாளுகை மற்றும் மனிதவள அபிவிருத்திக்குரிய கணக்காய்வு அவதானிப்புகள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

எம்.என். அபேசிறி
உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக

மாவட்டசெயலகம்
දිස්ත්‍රික්ලේකම්කාර්යාලය
DISTRICT SECRETARIAT

மட்டக்களப்பு
මඩකලපුව
Batticaloa.

அலுவலகம்
කාර්යාලය
Office
065-2222233

அரசாங்கஅதிபர்
දිසාපති
Govt. Agent
065-2222235
065-2224435

எனது இல
මගේඅංකය
My No
ACC/AUGEN/CU-9/2019/

உமது இல
ඔබේඅංකය
Your No

பக்ஸ்
ෆැක්ස්
Fax
065-2224466

மின்னஞ்சல
විද්‍යුත් තැපෑල්
e-mail
gabatti@sltnet.lk

திகதி
දිනය
Date
28.05.2020

கணக்காய்வு அத்தியட்சகர்,
தேசிய கணக்காய்வு அலுவலகம்,
மட்டக்களப்பு

மாவட்ட செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுகள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் II(I) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை.

மேற்படி விடயம் தொடர்பாக தங்களின் ENP/BT/A/Dis.Sec/FS/02/2019/05 ஆம் இலக்க 28.05.2020 ஆம் திகதிய அறிக்கை சார்பாக,

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

(ஆ)2019 நிதியாண்டில் திணைக்கள விற்பனைகள் மூலம் பெறப்பட்ட ரூபா 103,100 ஆனது பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினது வருமான செலவுத்தலைப்பில் கணக்கீடு செய்யப்படுவதனால் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் வெளிக்காட்டுவதற்கு பதிலாக தொழிற்பாட்டு செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலில் காட்டப்பட்டிருந்தது.

### 1.6.1 நிதி செயலாற்றல் கூற்று

26 அலுவலக வாகனங்களுக்கு ஏற்பட்ட 32 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றின் நட்டம் மற்றும் கைவிடுதல் பற்றிய கூற்றில் இழப்பீட்டு பெறுமதியில் இழப்பீட்டிற்கு எதிராக காப்புறுதி நிறுவனம் மற்றும் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்ட தொகையானது முறையான பதிவழிப்புகள் இடம்பெறும் போது உரிய இழப்பீடுகளுக்கான தொகை சீர்செய்யப்படும்.

### 1.6.2 நிதி நிலைமை கூற்று

(i) கடந்த நிதியாண்டில் நடைமுறையல்லாத சொத்துகளுக்கான திறைசேரியின் அச்சு பிரதிக்கும் மாவட்ட செயலகத்தின் பதிவேடுகளுக்கும் இடையில் இருந்த வேறுபாடுகளின் சீராக்கல் காரணமாகவும், சில பிரதேச செயலகங்களின் பதிவேடுகளுக்கும் Cigas கணக்கு பொதியின் ஊடான கணக்கீடுதலுக்கும் எற்பட்ட வேறுபாட்டினை சீர்படுத்தலினை மேற்கொண்டதனாலும் ஆரம்ப மீதியில் எற்பட்ட வேறுபாடானது ரூபா 32,763,853 தொகையினால் கட்டிடங்களும் கட்டமைப்பிற்கான கணக்கில் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

(ii) கடந்த நிதியாண்டில் நடைமுறையல்லாத சொத்துகளுக்கான திறைசேரியின் அச்சு பிரதிக்கும் மாவட்ட செயலகத்தின் பதிவேடுகளுக்கும் இடையில் இருந்த வேறுபாடுகளின் சீராக்கல் காரணமாகவும், சில பிரதேச செயலகங்களின் பதிவேடுகளுக்கும் Cigas கணக்கு பொதியின் ஊடான கணக்கீடுதலுக்கும் எற்பட்ட வேறுபாட்டினை சீர்படுத்தலினை மேற் கொண்டதனாலலும் web interface பொது திறைசேரியின் அரச கணக்குகள் திணைக்களத்தினால் ஆரம்ப மீதியில் எற்படுத்தப்பட்ட திருத்தம் காரணமாகவும் ரூபா 1,990,514 தொகையினால் இயந்திர மற்றும் உபகரணங்களுக்கான கணக்கில் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. தொடர்ந்து வரும் நிதியாண்டில் குறித்த கணக்கிடுதல் சீரான முறையில் இடம்பெறும்

(iii) பூர்த்தி செய்யப்படாது நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற புதிய மாவட்ட செயலகக் கட்டிடம் மற்றும் மண்முனை தென்எருவில் பற்று பிரதேச செயலகக் கட்டிட நிர்மாண வேலைகள் தொடர்பான நிதி ஒதுக்கீடுகள் ஒவ்வொரு நிதியாண்டுக்கும் பகுதியளவில் விடுவிக்கப்படுவதால் குறித்த நிதியாண்டுக்கான செலவீனம் கட்டிடத்தின் பெறுமதியினை அதிகரிப்பதனால் நடைமுறை வேலையாக வெளிக்காட்டப்படுவதற்கு பதிலாக கட்டிடங்களும் கட்டமைப்பிற்கான கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த கணக்கிடல் செயற்பாடானது Cigas கணக்கு பொதியின் ஊடாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளமையினால் உரிய கணக்கு மாற்றம் தொடர்பாக பொருத்தமான ஒரு படிமுறையினை பின்பற்றி எதிர்காலத்தில் உரிய சீராக்கலினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(iv) PD-6860 இலக்க அலுவலக வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக, அதற்கு ஏற்பட்ட சேதத்தின் பெறுமதி ரூபா 1,460,348 மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், பொது நிருவாகம்,உள்நாட்டலுவல்கள்,மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினது திருத்தம் தொடர்பான அனுமதி கிடைக்க பெறாமையால் நிதிக்கூற்றில் நட்டங்கள் மற்றும் கைவிடுதல் பற்றிய கூற்றில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. எதிர்கால கணக்கு நடவடிக்கைகளின் போது இவ்வாறான தவறுகள் எற்படாவண்ணம் எதிர்பார்க்கை நட்டங்களில் குறித்த மதிப்பிடுகளுக்கான தொகை காட்டப்படும்

(v) தங்களால் குறிப்பிடப்பட்ட 06 பிரதேச செயலகங்களுக்கான பிரதேச செயலாளர்கள் வதியும் இல்லங்களின் பெறுமதிகள் பொது நிருவாகம்,உள்நாட்டலுவல்கள்,மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் இதுவரையில் மதிப்பீடு செய்து வழங்கப்படாமையினால் இவற்றின் பெறுமதிகள் நிதிக்கூற்றில் வெளிக்காட்டப்படவில்லை. இனிவரும் காலங்களில் உரிய பெறுமதிகள் கிடைக்கப்பெறுமிடத்து அவை எமது நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமதியில் சேர்த்துக்கொள்ளப்படும்

1.6.3 மூலகச் செலவீனம்

நிதிப்பிரமாணம் 66 இற்கு அமைவாக ஒரே தலைப்பின் கீழ் இரு செயற்திட்டங்களுக்கிடையே மாற்றம் செய்யம் போது தலைப்பு 269-1-2-0-1409 இன் கீழ் வகைமாற்றம் செய்யப்பட்ட ரூபா.82,479.00 இரு முறை தவறுதலாக கூட்டப்பட்டதன் காரணமாக அத்தொகை ரூபா.6,500,238.00 தொகையாக காட்டப்பட்டிருந்தது. இம் மாற்றம் நிதிகூற்று செயற்பாடுகளில் எவ்விதமான மாற்றத்தினையும் எற்படுத்தவில்லை. எற்பட்ட இத்தவறு கவனக்குறைவு காரணமாக எற்பட்டுள்ளது. இவ்வாறான தவறுகள் இனிவரும் காலங்களில் ஏற்படாதவண்ணம் திருத்தியமைக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

1.6.4 திறைசேரி புத்தகங்களுடன் இணங்காமை

(i) திறைசேரியின் அச்சுப்பிரதியின், பொறுப்புக்கான ஒதுக்கச் சுருக்கத்தில் (எஸ்ஏ-90) 9165-0-0-269-0-0-0 விடயத்தின் கீழாக குறிப்பிடப்பட்ட தொகையானது எமது மாவட்டத்தின் மொத்த நடைமுறையல்லாத சொத்துக்களின் பெறுமதியாகும். Cigas உடான கணக்கு பொழிப்பு நடவடிக்கையின் போது 9165,9166 ஆகிய செலவுத்தலைப்புகளின் ஊடான பதிவு நடவடிக்கைகள் நடைமுறையல்லாச் சொத்துக்களை கணக்கிடுவதாகும். அத்துடன் குறித்த ஏஸ்ஏ-90 திறைசேரியின் அச்சு பிரதியானது Cigas web Interface ஊடாக வழங்கப்படுவதனால் குறித்த தலைப்புகளில் எம்மால் எவ்விதமான திருத்தத்தினையும் மேற்கொள்ளமுடியாது

(ii) நிதி கூற்றில் பொறுப்புகள் பற்றிய கூற்றில் (குறிப்பு IV) காட்டப்பட்டுள் தொகை குறித்த பிரதேச செயலகங்களில் குறித்த செலவுத்தலைப்புகளில் ஒதுக்கீடுகள் முடிவடைந்தமையினாலும்,பற்றாக்குறையின் காரணமாகவும் பொறுப்புகளாக காட்டப்பட்டவையாகும். திறைசேரியின் அச்சுப்பிரதிகளில் உரிய தொகை வெளிக்காட்டப்படுவதாயின் அப்பதிவுகள் Cigas கணக்கு பொதியின் ஊடாக பொறுப்புக்களாக காட்டப்படுதல் வேண்டும். ஒதுக்கீடுகள் முடிவடைதல்,பற்றாக்குறைகள் காணப்படுமாயின் அவற்றினை Cigas கணக்கு பொதியின் ஊடாக பொறுப்புக்களாக காட்டமுடியாத நிலை ஏற்படும். இதன் காரணமாக திறைசேரியின் அச்சுப்பிரதியில் பொறுப்புகளாக இவை காட்டப்படவில்லை.

**1.6.5 காசுப்பாய்ச்சல் கூற்று**

நிதி செயலாற்றுகைக் கூற்றில் ஆண்டிற்கான காசின் ஏற்பட்ட தேறிய அசைவானது பூச்சியத் தொகையாக முதன்மை பிரதியான சிங்களத்திலும், ஆங்கிலப்பிரதியிலும் வெளிக்கொணரப்பட்டிருந்த போதிலும் தமிழ் பிரதிக்கான பிரதி பண்ணல், புத்தக கோர்ப்பு நடவடிக்கையில் ஏற்பட்ட கவனக்குறைவு காரணமாக இத்தவறு ஏற்பட்டுள்ளது இவ்வாறான தவறுகள் இனிவரும் காலங்களில் ஏற்படாதவண்ணம் திருத்தியமைக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**1.6.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

தங்களால் சமர்ப்பிக்கப்பட்ட 06 கணக்காய்வு வினாக்களில் 06.03.2020 முன்பதாககிடைக்கப்பெற்ற கணக்காய்வுகளுக்கான பதில்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன், நாட்டில் எற்பட்டிருந்த Covid-19 காரணமாகத் தாமதமான மிகுதியான கணக்காய்வு வினாக்களுக்கான பதில்களை விரைவாக அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2. நிதி மீளாய்வு

2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

வருடத்தின் 4ம் காலாண்டில் சில அமைச்சுகளில் இருந்து அபிவிருத்தி பணிகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறுவதினால் குறித்த அபிவிருத்தி திட்டங்களை மாவட்டத்தின் அபிவிருத்தி கருதி மேற்கொள்ளவதனாலும் குறித்த பணிகளை ஆண்டின் இறுதியில் செயற்படுத்தவேண்டிய தேவை எற்படுவதினால் குறித்த பணிகளுக்கான கட்டுநிதியினை பெறமுடியாது போனது. அத்துடன் குறித்த பணிகளுக்கான சில செலவுத்தலைப்புகளுக்கான பொறுப்புகள் உரிய நேரத்தில் காட்டப்பட்டிருந்த போதிலும் திறைசேரியினால் கட்டுநிதி விடுவிக்கப்படவில்லையாதலால் பொறுப்பாக ஏற்பட்டுள்ளது.

2.2 வருமான முகாமைத்துவம்

கடந்த நிதியாண்டில் 4ம் காலாண்டில் அரசினால் மேற்கொள்ளப்பட்ட நெற்கொள்வனவிற்கான நிதியானது மீள் அறவீட்டின் போது 2003.99.00 வருமானத்தலைப்புக்கு வருமானம் ஆக சேகரிக்கப்பட்டதனாலும், காபன் வரி அறவீட்டுத்தலைப்பு, விதவைகள் அனாதைகள் ஒய்வுதியத்திட்டத்திற்கான அறவீட்டுத்தலைப்பு, மோட்டார் போக்குவரத்து திணைக்கள அறவீட்டுத்தலைப்புகள், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் அறவீட்டுத்தலைப்புகளுக்கான வருமான அறவீடுகள் தொடர்பாக உரிய திணைக்களங்களினால் மதிப்பீடுகள் கோரப்படாமையினால் அவை தொடர்பாக எம்மால் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுவதில்லை. இதன் காரணமாக மதிப்பீட்டுக்கு மேலதிகமாக வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

**2.3 செலவின முகாமைத்துவம்**

நிதி அமைச்சின் 2019 ஜூன் 17 ஆந் திகதிய 04/2019 இலக்க வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபத்தின் பிரிவு 02(II) இற்கு அமைய, மின்சார பட்டியலில் 5 சதவீதத்தினை சேமிப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டிருந்த போதும் பிரதேச செயலங்களின் பாவனைக்கென புதிய கட்டிடதொகுதிகள் அமைக்கப்பட்டு அவற்றின் பாவனை காரணமாகவும், அரசினால் வழங்கப்பட்ட பட்டதாரி பயிலுனர்களின் புதிய நியமனம் காரணமாகவும் மின்பாவனையில் அதிகரிப்பு எற்பட்டிருந்தது. இதன் காரணமாக 1 சதவீதத்திற்கும் குறைந்த தொகையினையே மாவட்ட செயலகத்தினால் சேமிப்பு செய்யப்பட்டது.

**2.4 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு**

---

(i) உரிய கணக்காய்வு ஐய்யவினா 06.03.2020 கிடைக்கப் பெற்றுள்ளமையால் நாட்டில் COVID-19 காரணமாக ஏற்பட்ட அசாதாரண நிலமை காரணமாக உரிய நேரத்தில் இதற்கான பதில் தங்களுக்கு அனுப்பிவைக்கப்படவில்லை. தற்கான பதில் தங்களுக்கு அனுப்பிவைப்பதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

(ii) இதற்கான பதில் ACC/AUQRY/CU-9/KPW/2018 இலக்க 27.05.2020 ந் திகதிய கடிதம் மூலமாக தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(iii) உரிய கணக்காய்வு ஐயவினா 19.05.2020 கிடைக்கப் பெற்றுள்ளமையால் இதற்கான பதில் தங்களுக்கு அனுப்பிவைப்பதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கான பதில் துரிதமாக அனுப்பிவைக்கப்படும்.

2.5 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

**i.** நிதிபிரமானம் 135 படி கொடுப்பனவுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் அதிகாரகையளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

**ii.** உத்தியோகத்தர்களுக்கான கடமை பட்டியலானது உள்ளக செவ்வைமுறையில் வழங்கப்பட்டுள்ளது.

**iii.** மாவட்ட செயலகத்திற்கான, பிரதேச செயலகத்திற்கான கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டமானது சீரான முறையில் இடம்பெற்று வருவதுடன் உள்ளக்கணக்காய்வு பொறிமுறையானது வினைத்திறனான முறையில் செயற்பட்டு வருகின்றது.

**iv**. நிறுவனத்துக்கான முறையான செயற் திட்டம், வருடாந்த திட்டம், பெறுகை நடைமுறை என்பன தயாரிக்கப்பட்டு நடைமுறை படுத்தப்பட்டு வருகின்றது.

## 2.6 நிலுவை கடன் மீதிகளை அறவிடாமை

தங்களால் குறிப்பிடப்பட்ட தொகையில் ரூபா 381,050 மீள அறிவிடப்பட்டுள்ளது. மிகுதியான தொகையில் ஒய்வுதியம் பெற்று கெண்டவர்களில் கடன் நிலுவையானது அவர்கள் ஒய்வூதிய பணிக்கொடை வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் மீள அறவீடு செய்யப்படும்.

## 2.7 வைப்புக்கள்

நிதி பிரமாணம் 570 பிரகாரம் காணி சுவீகரிப்பு நடவடிக்கைக்காக வைப்பு செய்யப்படும் தொகையானது வைப்பு திகதியில் இருந்து 10 ஆண்டுகளுக்கு வைப்பு கணக்கில் பேணப்படலாம் என்பதற்கமைவாக குறித்த திட்டம் முடிவுறுத்தப்படும் வரையில் வைப்பு கணக்கில் பேணப்பட்டு வருகின்றது.

திருமதி. கலாமதி பத்மராஜா,
மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம்,
மட்டக்களப்பு.

MRS. KALAMATHY PATHMARAJAH
District Secretary / Government Agent
Batticaloa District.

# அத்தியாயம் 04 செயலாற்றுகைச் சுட்டிகள்

## 4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் ( செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் )

| குறிப்பீட்டு சுட்டிகள் | எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு | | |
|---|---|---|---|
| | **100% - 90%** | **75% - 89%** | **0% 74%** |
| கட்டட மீள்நிர்மானம் மற்றும் மேம்படுத்தல் | | 74% | |
| புதிய கட்டட நிர்மானம் | | 79% | |
| புதிய மாவட்டச் செயலக கட்டட நிர்மானம் | | | 24% |
| தளபாடம் மற்றும் உபகரணம் | 99% | | |
| பொறி மற்றும் இயந்திரம் | 99% | | |

# அத்தியாயம் 05 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை

## 5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை சுட்டிக் காட்டல்.

| பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| குறிக் கோள் இலக்கம் | இலக்கு / குறிக்கோள் | அடைவுகள | குறிகாட்டிகள் | இதுவரை அடையப்பெற்ற முன்னேற்றம் | | |
| | | | | 0% - 49% | 50%-74% | 75% - 100% |
| 1 | எல்லோரும் எல்லா வயதுகளிலும் நன்றாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதை உறுதிப்படுத்துதல். | 2025 இல் போசாக்கு குறைந்த பிள்ளைகளின் பிறப்பு வீதத்தை 1/3 பங்காக குறைத்தல். | கர்ப்பிணி தாய்மாருக்கான போசாக்கு வழங்கும் 44597 வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. | | | 100% |
| 2 | உள்ளார்ந்த மற்றும் நிலைத்திருக்கத்தகு பொருளாதார வளர்ச்சியின் ஸ்திரம் மற்றும் சகலருக்கும் ஒழுக்கமான வேலை மற்றும் உற்பத்தி தொழில் என்பவற்றை ஏற்பாடு செய்தல் | 2025 அளவில் வேலைகளின் பெறுமதிக்கு சமனான சம்பளத்தை இளைஞர்கள் மற்றும் வலது குறைந்தவர்களையும் உள்ளடக்கிய ஆண்கள் பெண்கள் இருபாலாருக்கும் ஒழுக்கமான வேலை மற்றும் உற்பத்தி தொழிலுக்கான முழு அடைவிற்கான வழிகளைச் செய்து கொடுத்தல். | அபிவிருத்தி வேலைக்கு 4047 வேலைத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. | | | 100% |
| 3 | நிலைத்திருதகு மற்றும் அமைதியான பாதுகாப்பான நகரங்களை உருவாக்கியதுடன் மனித குடியேற்றத்தையும் மேற்கொள்ளல். | அரசுக்கு முறையான புள்ளிவிபர மதிப்பீட்டை வழங்குதல் | 25334 தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. | | | 100% |
| 4 | காணியில் குடியிருப்பு | 1.மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்.<br>2.சகலருக்கும் காணி வழங்குவதற்கான ஒழுங்கு முறைகளை மேற்கொள்ளல். | காணி அனுமதிப்பத்திரம் 1785 வழங்கப்பட்டது. | | | 91% |
| 5 | நிலைத்திருக்கத்தகு அபிவிருத்திக்கான சமூகங்களை உள்ளடக்கிய சமாதானத்தை ஏற்படுத்தல். சகலருக்கும் நீதிக்கான வழியை வழங்குவதுடன் சகல மட்டங்களிலும் நிறுவனங்களை உள்ளடக்கி உறுதியுடனும் பயனுறுதியுடனும் கட்டியெழுப்பல். | மாவட்ட நிர்வாகத்தின் பயனுறுதியான நடைமுறைகளை மேற்கொள்ளல். | 54 கணக்காய்வு முகாமைத்துவ கூட்டங்கள் நடாத்தப்பட்டன. | | | 84% |

## 5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள்

மாவட்டத்தில் காணப்படும் சமூக பொருளாதார அபிவிருத்தி வளர்ச்சியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டியூடாக 2019 இல் நிலைத்திருக்கத்தகு அபிவிருத்தி இலக்குகளில் 80% இற்கும் அதிகமான நோக்கங்கள் எட்டப்பட்டவை என இது பிரதிபலிக்கின்றது.

# அத்தியாயம் 06 மனிதவள விபரம்

## 6.1 பதவியணி முகாமைத்துவம்

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணி | பதவி வெற்றிடம் / (அதிகப்படியான ) |
|---|---|---|---|
| சிரேட்ட நிலை | 51 | 49 | 2 |
| மூன்றாம் நிலை | 33 | 16 | 17 |
| இரண்டாம் நிலை | 928 | 851 | 77 |
| ஆரம்ப நிலை | 156 | 128 | 28 |
| மொத்தம் | **1168** | **1044** | **124** |

## 6.2 நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு தாக்கம் செலுத்திய மனித வளங்களின் மிகை அல்லது குறை எவ்வாறானது என்பதனை சுருக்கமாகக் குறிப்பிடுதல்

மாவட்ட செயலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 1168, தற்போதுள்ள ஆளணி 1044, பற்றாக்குறை 124 ஆகும். இரண்டாம் நிலை உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையாகவும் அதே நேரத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மேலதிகமாகவும் உள்ளனர். நிர்வாக உத்தியோகத்தர் ஆளணி பற்றாக்குறையாகக் காணப்படுகின்றது. பற்றாக்குறை மாவட்ட நிர்வாகத்திற்கு சிரமமாக காணப்படுகின்றது.

## 6.3 மனித வள அபிவிருத்தி

ரூபா.000

| நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | பயிற்றப்பட்ட பதவியினர் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டக்காலம் | மொத்த முதலீடு (ரூபா'000) உள்நாட்டு / வெளிநாட்டு | நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு (உள்நாட்டு / வெளிநாட்டு) | வெளியீடு / பெற்றுக் கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|
| அளிக்கப்பட்ட மற்றும் மதிப்பிடப்பட்ட பயிற்சித் திட்டம் | 6 | 14, 15 ஆம் திகதிகள் பங்குனி மாதம் | | உள்நாட்டு | ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல் |
| பெறுகை நடைமுறை பயிற்சித் திட்டம் (மாவட்ட செயலகம் மற்றும் 14 பிரதேச செயலகங்கள்) | 94 | 21 ஆம் திகதி பங்குனி மாதம் | | உள்நாட்டு | ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல் |
| EAST பயிற்சித் திட்ம் மற்றும் அரச கற்றல் நோக்கத் திட்டம். | 85 | 17 ஆம் திகதி வைகாசி மாதம் | | உள்நாட்டு | ஆளுமை விருத்தயை கட்டியெழுப்புதல் |
| பெறுகையும் ஒப்பந்த முகாமைத்துவ சிகிச்சை (நடுவர் மற்றும் மத்தியஸ்தம்) பயிற்சித் திட்டம் | 119 | 23 ஆம் திகதி ஆடி | | உள்நாட்டு | ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல் |
| நிலைத்திருக்கத்தகு அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் KPI பயிற்சித் திட்டம் | 120 | 15 ஆம் திகதி ஐப்பசி மாதம் | | உள்நாட்டு | ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல் |
| சாரதிகளுக்கான திறன்விருத்தி பயிற்சித் திட்டம். | 40 | 26 ஆம் திகதி கார்த்திகை மாதம் | | உள்நாட்டு | ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல் |
| அரச நிறுவனங்களுக்கான நிதி நடைமுறைகள் மற்றும் அலுவலக முறைமையின் அறிமுகம் (இரண்டு தொகுதியினருடையவை) | 260 | 26,27 ஆம் திகதிகள் மார்கழி மாதம் | | உள்நாட்டு | ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல் |
| பசுமை உற்பத்தி திறனும் உற்பத்திறன் பயிற்சித்திட்டமும். | 60 | 30 ஆம் திகதி மார்கழி மாதம் | | உள்நாட்டு | ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல் |
| தரம்1முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கான தடைதாண்டல் பரீட்சைக்கு விலக்களிப்பதற்கான பயிற்சித்திட்டம். | 16 | 14,28 ஆம் திகதிகள் ஐப்பசி மாதம் | | உள்நாட்டு | ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல் |
| மொத்தம் | 800 | | 600 | | |

# அத்தியாயம் 07 இணக்கப்பாட்டு அறிக்கை

| இல | ஏற்படைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை ( இணக்கமானது / இணக்கமற்றது ) | இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது |
|---|---|---|---|---|
| 01 | பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | | | |
| 1.1 | வருடாந்த நிதி அறிக்கைகள் | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 1.2 | அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 1.3 | வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் ) வர்த்தக முற்பணக் கணக்குகள் | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 1.5 | சிறப்பு முற்பணக் கணக்கு | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 1.6 | ஏனையவை | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 2 | புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் ( நி.பி.4450) | | | |
| 2.1 | பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்துப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 2.2 | ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 2.3 | கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பரா-மரித்தல் | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 2.6 | காசோலை மற்றும் காசுக்கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 2.7 | பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 2.8 | இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 2.9 | இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 2.10 | பொறுப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.11 | அடிக்கட்டை புத்தகங்களின் (GA – N20 ) பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 03. | நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி.135) | | | |
| 3.1 | நிதி அதிகாரங்கள் நி-றுவனத்திற்குள் பகிரப்பட்டன. | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 3.2 | நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்பட்டது | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது. | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 3.4 | 2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல.171/2004 இன் படி அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை. | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 04 | வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல் | | | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டுத்திட்டம் தயாரித்தல் | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 4.2 | வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரிததல் | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 4.3 | வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல் | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றம் அதை தேசிய வ.செ.தி. திணைக்களத்தில் (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 4.5 | வருடாந்த காசுப்பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 05 | கணக்காய்வு வினாக்கள் | | | |
| 5.1 | அனைத்து கணக்காய்வு வினாக்களும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது. | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 06 | உள்ளக்க் கணக்காய்வு | | | |
| 6.1 | நி.பி.134 (2) டி.எம்.ஏ/1-2019 படி ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல் | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 6.2 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல் | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 6.3 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | அடிப்படையில் கணக்காய்வு நாயகத்திற்கு சமர்ப்பித்தல். | | | |
| 6.4 | அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134(3) நிதி பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வு நாயகத்திற்கு சமர்ப்பித்தல். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 07 | கணக்காய்வு மற்றம் முகாமைத்துவக் குழு | | | |
| 7.1 | டி.எம்.ஏ/1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 08 | ஆதன முகாமைத்துவம் | | | |
| 8.1 | ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல.01/2017 சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்கவேண்டும் | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 8.2 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும் அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல்அலுவ-லகத்திற்குஅனுப்புவதற்கும் பொருத்தமானதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார் | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 8.3 | அரச நிதி சுற்றறிக்கை இல.05/2016 இன் படி பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 8.4 | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன. | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 8.5 | நி.பி.772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது. | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 09 | வாகன முகாமைத்துவம் | | | |
| 9.1 | குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை கணக்காய்வாளர் நாயகத்திற்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 9.2 | கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 9.3 | வாகன பதிவு புத்தகங்கள் பரா-மரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி103,104,109 மற்றும்110 இன் படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 9.5 | 2016.12.29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல.2016/30 இன் பந்தி 3.1 இன் விதிகளின் படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும்ம் பரிசீலித்தல். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 9.6 | குத்தகை வாகனங்களின் உரித்த பதிவு பத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 10 | வங்கி கணக்குகளின் முகாமை | | | |
| 10.1 | உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல் | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 10.2 | மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளைத் தீர்த்தல். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 10.3 | வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவை-களைத் தீர்த்தல். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 11 | நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல் | | | |
| 11.1 | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 11.2 | நி.பி.94(1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும் | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 12 | அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு | | | |
| 12.1 | எல்லைகளுக்குள் இணங்குதல் | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 12.2 | நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 13 | பொது வைப்புக் கணக்கு | | | |
| 13.1 | காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி.571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 13.2 | பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு அறிக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 14 | முற்பணக் கணக்கு | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 14.1 | மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப்புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 14.2 | நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறை-வடைந்த மாதத்திற்குள் தீர்க்கப்படும். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 14.3 | நி.பி.371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 14.4 | மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 15 | வருமானக் கணக்கு | | | |
| 15.1 | விதிகளின் படி சேர்க்கப்பட்ட வரு-மானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 15.2 | திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேர-டியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 15.3 | நி.பி. 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 16 | மனித வள முகாமைத்துவம் | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 16.2 | ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 16.3 | 20.09.2017 தேதியிட்ட எம்.எஸ..டி சுற்றறிக்கை இல.04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 17 | பொதுமக்களுக்கான தகவல் வழங்கல் | | | |
| 17.1 | தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல் | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 17.2 | அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துகள்/ குற்றச்சாட்டுக்களை எளிதாக்குதல். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 17.3 | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுக-ளின் படி ஆண்டுக்கு இரண்டு | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல். | | | |
| 18 | பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல் | | | |
| 18.1 | பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல.05/2008 மற்றும் 05/2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்ததல். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 18.2 | சுற்றறிக்கையின் பந்தி 2.3 ஐப் பொறுத்தவரை, பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதீப்பீடு செய்யவும் றிறுவனம் ஒரு பொறி முறையை அமைத்துள்ளது. | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 19 | மனித வள திட்டத்தினை தயாரித்தல் | | | |
| 19.1 | 2018.01.21 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல.02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வள திட்டத்தினை தயாரித்தல். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 19.2 | ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்த பட்சம் 12 மணிநேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கு குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி செய்ய வேண்டும். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 19.3 | மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கை-யெழுத்திடப்பட்டுள்ள்து. | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 19.4 | மேற்கண்ட சுற்றறிக்கையின 6.5 வது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத்திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |
| 20 | கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள் | | | |
| 20.1 | முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பந்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல். | இணக்கப்பாடு எட்டப்பட்டது. | | |